தொழிற்கல்வி தேடுதல்: எது சிறந்த வழி?

தொழில் குறிக்கோளை முடிவாக்குதல்

நீங்கள் தொழிற்கல்விக்கான இடத்தைத் தேடுவதானால், உங்களது தொழிலுக்கான தெரிவை ஏற்கனவே முடித்திருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: தேர்ந்தெடுத்த தொழிலுக்குத் தேவைப்படும் திறமையை நீங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் நீங்கள் ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு தேடுவது முக்கியமானது, எவ்வித திட்டமும் இல்லாமல் எழுந்தமானாக மிகச் சிறப்பான தொழிற்கல்வி இடத்தை அடைய முயற்சிப்பது வெற்றிதராது.

முகவரிகளைத் தேடிக்கொள்வது

இப்போது நீங்கள் அடுத்த கோடைகாலத்தில் உங்கள் விருப்பமான தொழிலுக்கு எந்தெந்த நிறுவனங்கள் பயில்வோரைத் தேடுகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இதற்காகப் பல வசதிகள் மற்றும் தொடர்புகள் உள்ளன:

- தொழில் ஆலோசனை நிலையத்தில் [1] நீங்கள் தொழிற்கல்வி கற்பவர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில்களைக் கற்பிப்பதற்கு எந்தெந்த நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்ற பட்டியலைக் காணலாம்.
- இணையத்தளத்தில் தொழிற்கல்வி கற்பதற்கு இன்னும் வெறுமையாக உள்ள இடங்களைத் தேடலாம்.[2]
- நாளாந்த செய்திப்பத்திரிகையில் இலவசவிளம்பரங்களில் அல்லது நிறுவனங்களின் இணையத்தளத்தில் காணலாம்.
- பலர் தமக்குத் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் ஊடாக ஒரு தொழிற்கல்விக்கான இடத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். ஏற்கனவே இருக்கும் தொடர்புகளைப் பாவித்துக் கொள்ளுங்கள்.

தொடர்பை ஏற்படுத்துவது

இப்போது உங்களிடம் முகவரிகள் உள்ளன. இந்த நிறுவனங்களிடம் தற்போது தொழிற்கல்விக்கான இடங்கள் வெறுமையாக உள்ளனவா எனக் அறிந்துகொள்ளுங்கள். இந்த முதல் தொடர்பை தொலைபேசியில் மேற்கொள்ளுங்கள் அல்லது நேரடியாக அந்த நிறுவனத்துக்குச் சென்று விசாரித்துக் கொள்ளுங்கள். அவர்கள் சாதகமாகப் பதிலளித்தால், எவ்வாறு அதற்கு விண்ணப்பிப்பது எனக் கேட்டுக்கொள்ளுங்கள். ஒருசில நிறுவனங்கள் எழுத்து வடிவமான விண்ணப்பத்தையும் மற்றும் வேறுசில விரைவில் நேரடியாக உங்களை பார்த்து அறிந்து கொள்ள விரும்புவார்கள். முக்கியமானது என்னவென்றால் நிறுவனம் எவ்வாறு விரும்புகிறதோ அவ்வாறு விண்ணப்பிப்பதாகும்.

நீங்களாக விண்ணப்பிப்பது

ஒவ்வொரு நிறுவனமும் ஆரம்பத்திலோ அல்லது பின்பாகவோ ஒரு எழுத்துவடிவமான விண்ணப்பதைக் கோரும். ஒரு விண்ணப்பம் எவ்வாறு இருக்க வேண்டும் மற்றும் எவ்வாறான உள்ளடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு ஒரு தெளிவான விதிமுறைகள் உண்டு. பாடசாலையில் அல்லது தொழில் ஆலோசனை நிறுவனத்தில், ஒரு விண்ணப்பம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதைக் கேட்டறிந்து கொள்ளலாம், உங்களால் சரிவர அதைச் செய்ய முடியாவிட்டால் அவர்களிடம் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

[1] ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக் குறைந்தது ஒரு தொழில் ஆலோசனை நிலையம் உள்ளது. இதன் முகவரிளை பாடசாலையில், நகரசபையில் அல்லது கீழுவரும் முகவரிகளில் பெற்றுக்கோள்ளலாம்:

டொச்: www.berufsberatung.ch/biz பிரெஞ்சு: www.orientation.ch/offices இத்தாலியம்: www.orientamento.ch/uffici
தொழில் ஆலோசனை நிலையம் ஒரு சிறப்பான பெயரில் அல்லது ஒரு சுருக்கப் பெயரில் இருக்கும்:
சுவிசில் டொச் பேசும் பகுதியில்: BIZ, Laufbahnzentrum
சுவிசில் பிரெஞ்சு பேசும் பகுதியில்: OP, SOPFA, OFPC, COS, OROSP, CIO, OCOSP
சுவிசில் இத்தாலியம் பேசும் பகுதியில்: orientamento, UOSP

[2] வெறுமையாக உள்ள தொழிற்கல்வி இடங்கள்:
சுவிசில் டொச் பேசும் பகுதியில்: www.berufsberatung.ch/Lehrstellen
சுவிசில் பிரெஞ்சு பேசும் பகுதியில்: www.orientation.ch/apprentissage
சுவிசில் இத்தாலியம் பேசும் பகுதியில்: www.orientamento.ch/apprendistato

அத்துடன் இணையத்தளத்திலும்[3] மாதிரிப் படிவங்களைக் காணலாம். நீங்கள் அதை அனுப்புவதற்கு முன்பாக ஒரு பொறுப்பான நபரிடம் காண்பித்து அது முழுமையாக உள்ளதா, நிறுவனத்துக்கும் தொழிலுக்கும் பொருத்தமானதா, பிழையில்லாமல் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம். மேலும் ஒரு எடுத்துக்காட்டு: எப்போதும் நீங்கள் ஒரே நேரத்தில் பல இடங்களுக்கு விண்ணப்பியுங்கள். அதன்மூலம் உங்களுக்கு தொழிற்கல்விக்கான இடத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்.

மேற்பார்வையை வைத்திருத்தல்

உங்களது அனைத்து விண்ணப்ப நடவடிக்கைகள் குறித்தும் நீங்கள் ஒரு குறிப்புப் பதிவை வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும். சிறப்பாக இந்த விடயத்திற்காக நீங்கள் ஒரு பட்டியலைத் தயாரித்து, எப்போது விண்ணப்பித்தீர்கள், ஒரு தவணை வழங்கப்பட்டதா, எதுவரை அவர்கள் பதிலளிப்பார்கள் போன்றவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் எவை செய்தாயிற்று, யாரிடமிருந்து மேலும் பதிலை எதிர்பார்த்துள்ளீர்கள், எப்போது நீங்கள் மீளவும் தொடர்புகொண்டு அறிய முடியும் போன்றவற்றை நீங்கள் இலகுவாகத் தெரிந்து கொள்ளலாம்.

பரீட்சைகள் மற்றும் உரையாடல்களை மேற்கொள்ளல்

பல நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் நீங்கள் அதற்கு உகந்தவரா என அறிந்து கொள்வதற்காகப் பரீட்சை ஒன்றில் தோற்றுமாறு கேட்பார்கள். உங்களுக்கு விருப்பமான தொழிலுக்கு இது எவ்வாறு இருக்கும் மற்றும் எதை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உங்களை தெரிவு செய்ய விரும்பினால் ஆண் அல்லது பெண் இயக்குனர் நேரடியாக உங்களைச் சந்திப்பதற்கு விரும்பலாம். இவ்வாறு அறிமுகக்கலந்துரையாடலுக்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். கேட்கக்கூடிய கேள்விகள் மற்றும் விடைகளை யோசித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு சந்தேகம் இருந்தால் வேறு நபர்களிடம் கதையுங்கள். இக் கலந்துரையாடலில் உங்களது தனிப்பட்ட உறுதியைக் காட்டுவது முக்கியமான ஒரு விடயமாகும். உங்களை நீங்கள் சிறப்பான விதத்தில் எடுத்துக் காட்டுங்கள்! விருப்பம் உள்ளவராகவும் உற்சாகத்துடன் இருப்பவராகவும் உங்களைக் காட்டிக்கொள்ளுங்கள்.

நிராகரிப்பை தாங்கிக்கொள்ளல்

பல தொழில்களுக்கு தொழிற்கல்வி இடத்தைப் பெறும் விடயம் கடினமானது. ஆகவே உங்களது விண்ணப்பத்தை நிராகரிப்பதையும் எதிர்பார்க்க வேண்டும். அப்படியானால் ஒருபோதும் ஏமாற்றம் அடைய வேண்டாம். தொடர்ந்து முயற்சியைக் கைவிடாது தொடருங்கள். எப்படியிருப்பினும் நிராகரிப்பிற்கான காரணத்தைக் கேட்டு அறிந்தால் எதிர்காலத்தில் நீங்கள் உங்களை சிறப்பாக்கிக் கொள்ளலாம் அதனால் வெற்றி கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

விட்டுக்கொடுப்புடன் இருத்தல்

ஒரே ஒரு தொழிலில் மட்டும் இறுக்கமாக இருக்காதீர்கள். சிலவேளைகளில் உங்களுக்கு விருப்பமான தொழிலுக்கான தொழிற்கல்வி இடத்தை நீங்கள் தேடிகொள்ள இயலாமல் போகலாம். அதற்கு வேறு தீர்வைப்பெற நீங்கள் ஆயத்தமாக இருப்பது முக்கியமானதாகும்.

நீங்கள் கடின முயற்சி எடுத்தும் நீண்ட காலமாக உங்களுக்கு விருப்பமான தொழிற்கல்வி இடத்தைப் பெற முடியாது போனால், நிலைமையை கவமாக ஆராய்ந்து கொள்வது அவசியமாகும். சம்பந்தப்பட்ட தொழிலுக்கான அடிப்படைக்கல்வி, ஒரு இடை வருடக்கல்வி, ஒரு தொழில் அறிமுகச்சேவை, ஒரு மொழி கற்கும் வருடம் போன்றவற்றிற்கான சந்தர்ப்பங்கள் குறித்து பரீட்சித்துக் கொள்ளுங்கள். உரிய காலத்துடன் இதுகுறித்துக்

---

[3]
டொச் பேசும் சுவிஸ் பகுதியில்: www.berufsberatung.ch/lehrstellenbewerbung

பிரெஞ்சு பேசும் சுவிஸ் பகுதியில்: www.orientation.ch/candidature-apprentissage

இத்தாலி பேசும் சுவிஸ் பகுதியில்: www.orientamento.ch/candidatura-tirocinio

கவனமெடுப்பதுடன் இதுகுறித்த தகவல்கள் மற்றும் தேவைப்படும் உதவிகளைத் தேடிக்கொள்ளுங்கள். மேற்கொண்டு செய்ய வேண்டியவைகள் குறித்து உங்கள் தொழில் ஆலோசகர் அல்லது ஆலோசகியுடன் கதைத்துத் திட்டமிடுங்கள். ஒருதொழிற் கல்வியைக் கற்றுத் தேறுவது (அல்லது மத்தியதரப் பாடசாலைக்கல்வியை நிறைவுசெய்வது) உங்கள் எதிர்காலத்திற்கு நீங்கள் இடும் முக்கிய அடித்தளம் என்பதுடன் உங்களை மேலும் வளர்த்துக்கொள்ள பல்வேறு வழிகளைத் திறக்கின்றது.